DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of Judicial Magistrate Court, Sankarankovil )

| | | |
|---|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 131/2019** |
| Deposition of Witness for | : PW3 |
| Name | : ஜெயச்சந்திரன் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 02.07.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 02 July 2026.

**எதிரிகள் ஆஜரில்லை.மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. வழக்கறிஞர் ஆஜர்.**

**<u>முதல்விசாரணை:</u>**

நான் தற்போது சங்கரன்கோவில் வசித்து வருகிறேன். நான் நகை பட்டறை வைத்து தொழில் செய்து வருகிறேன். அ.சா.1, அ.சா.2-யை எனக்கு தெரியும். எதிரிகளை எனக்கு தெரியும். 2011 ஆண்டு ஒரு நாள் அ.,சா.1 அவரது வீட்டில் வைத்து முருகன், 1-ம் எதிரி முனியான்டியிடம் ரூ.6,00,000/- கொடுத்தார். நானும் ரீபாயும் உடன் இருந்தோம். என்னிடம் காட்டப்படும் பத்திரத்தில் உள்ள 2-ம் சாட்சி கையொப்பம் என்னுடையது

தான். **அந்த 2–வது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.4 ஆகும்**. இந்த வழக்கு சம்பவம் தொடர்பாக சங்கரன்கோவில்தாலுகா காவல் நிலையத்தில் அ.சா.1 புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

அ.சா.1 முருகன் எனக்கு நெருங்கிய உறவினர் என்றால் சரிதான். அவர் என்ன தொழில் செய்கிறார் என்றால் அவர் தச்சுத் தொழிலும், நகை வியாபாரமும் பார்த்தார். அவர் எந்தமாதிரி நகை வியாபாரம் பார்த்தார் என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கு பொருத்தவரையில் நான் காவல்நிலையத்திலும் கையெழுத்து போட்டேன், பத்திரத்திலும் கையெழுத்து போட்டேன். பணம் எங்கு வைத்து எந்த தேதியில் எந்தநேரத்தில் யாரிடம் கொடுத்தார் என்ற விபரம் தெரியுமா என்றால் காலையில் முருகன் முடியான்டி என்பரிடம் கொடுத்தார். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் ஒரு முறை விசாரணை செய்தார்கள். நான் சொந்தமாக நகை பட்டறை வைத்துள்ளேன். நான் நகை எங்கு வாங்குவேன் என்றால் பழைய நகைகளை உருக்கி தங்கமாக்குவேன், சேட்டிடம் புதிய தங்க நகைகளை வாங்குவேன். பொதுவாக தங்கத்தை சேட்டிடம் வாங்குவார்கள் என்றால் சரிதான். தங்க கட்டிகளை சேட்டுகளிடம் தான் வாங்கமுடியும் மற்றவர்களிடம் வாங்கமுடியாது என்றால் சரிதான். எதிரி முனியான்டி சேட்டா என்றால் எனக்கு தெரியாது. நான் கையெழுத்து போட்ட பத்திரத்தில் என்ன எழுதியுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ஆனால் பணம்கொடுத்த விபரம் எனக்கு தெரியும். எதிரிக்கும் அ.சா.1 –க்கும் எப்படி தொடர்பு ஏற்பட்டது என்ற விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது . எதிரிக்கும் இந்த வழக்கிற்கும்

சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. அ.சா.1 எனது உறவினர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாடசியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

(Sd/-)M.Mari
Judicial Magistrate,
Sankarankovil.